# தமிழ் தேசியத்தை உள்ளடக்கியதே திராவிட தேசியம்!

தமிழ், திராவிடம் இரண்டையும் வெவ்வேறானதாகவும் ஒன்றுக்கொன்று எதிரானதாகவும் சித்திரிக்க சிலர் விரும்புகின்றனர். திராவிடம் என்பது மண், மக்கள், மரபு, பண்பாடு ஆகிய பல்வேறு கூறுகளை உள்ளடக்கிய ஒரு அடையாளம். கால்டுவெல் ஏதோ உள்நோக்கத்துடன் அறிமுகப்படுத்திய வார்த்தை அல்ல. பல நூறு ஆண்டுகளாக இந்தியத் துணைகண்டத்தில் வழக்கில் இருந்துவரும் சொல். சம்ஸ்கிருத, தமிழ் பக்தி இலக்கியங்கள் தொடங்கி கல்வெட்டு, செப்பேட்டுச் செய்திகள் வரைக்கும் இதற்கு எத்தனையோ வலுவான வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன.

மனு ஸ்மிருதியிலிருந்தே தொடங்குவோம். பௌண்டரம், ஔண்டரம், திராவிடம், காம்போசம், யவனம், சகம், பாரதம், பால்ஹீகம், சீநம், கிராதம் தரதம், கசம் இந்தத் தேசங்களை ஆண்டவர்கள் அனைவரும் மேற்சொன்னபடி சூத்திரர்களாய் விட்டார்கள் (அதிகாரம் 10, 44-ஆவது செய்தி, மனுதர்ம சாஸ்திரம்). நமது தமிழ்நாடு திராவிட தேசமாக இரண்டாயிரம் ஆண்டுகளாக அறியப்பட்டு வருகிறது என்பதற்கான ஆதாரம் இது. ‘தயாவத்யா தத்தம் திராவிட சிசுஹு ஆஸ்வாத்ய தவயத் ’ என்கிறது ஆதிசங்கரரின் ‘சௌந்தர்ய லஹரி’.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ‘ராஜ தரங்கணி’ என்ற சமஸ்கிருத காஷ்மீர் சுவட்டில் தென்னாட்டு பிராமணர்களை ‘திராவிட பிராமணர்கள்’ என்று குறிபிட்டுள்ளது. பார்ப்பனக் கருத்தியலில் மாறுபட்டிருந்தாலும் திராவிடம் பற்றிய இந்தப் பதிவுகள் ஏடுகளில் இருப்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. வைணவ ஆச்சாரியார் வேதாந்த தேசிகரின் தென்னிந்திய மொழிக் குடும்பங்களின் தொகுப்பை திராவிட மொழிகள் தொகுப்பு என்று உறுதி செய்கின்றார் எல்லீஸ்.

சமண, பௌத்த சமயங்களும், பாலி, சமஸ்கிருதம் மொழிகளும் திராவிடம் என்பதை மொழிவாரி அமைந்த பகுதிகள் என்று குறிப்பிட்டுள்ளன. அதேபோல ‘பாகவதம்’ என்ற நூலிலும் திராவிடம் எனப் பொருள் கொள்ளும்படி ‘த்ரமிடம்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போது அழைக்கப்பட்ட 56 நாடுகளில் திராவிட நாடும் ஒன்று.

விந்திய மலைக்குத் தென்புறத்தில் உள்ள வட்டாரங்களை பஞ்ச திராவிட நாடுகள் என்று அழைத்ததாக தகவல்கள் உள்ளன. விந்திய மலைக்கு வடக்கே உள்ள பிரதேசங்கள் பஞ்ச கௌட நாடுகள் என்றும் அழைக்கப்பட்டுள்ளன. இப்படியாக பக்தி இலக்கியங்களில் குறிப்பிட்டாலும், திராவிடம் என்று முதன் முதலில் பயன்படுத்திய காலத்தை அறுதியிட்டுச் சொல்ல முடியாத நிலையில் உள்ளோம்.

இராமாநுஜர் காலத்தில் வைணவப் பாசுரங்களை ‘திராவிட வேதம்’ என்று குறிப்பிட்டதும், ‘திருக்கோளூர் பெண்பிள்ளை ரகசி’யத்தில் இராமாநுஜரிடம் பாடல் வழியாகப் பேசும் பொழுது கூட வைணவ வேதங்களைப் பற்றி குறிப்பிடும்போது திராவிடம் என்றே அனுமானித்து பேசப்பட்டுள்ளதாக வழக்கில் உள்ளது.

திரமிளம், திராவிடம் என்ற இரு சொற்களும் ஒன்றே எனத் தரவுகள் சுட்டிக்காட்டியுள்ளன. திரமிள சங்கம் மதுரை சமண முனிவர் வஜ்ரநதியால் கி.பி 470-இல் நிறுவப்பட்டது. திரமிள் என்பது திராவிட என்ற பொருளையே குறிக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். நிலவியல் அடிப்படையில் முக்கடலும் சங்கமிக்கும் பகுதி என்பதைக் குறிக்க த்ரையம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டு பின்பு இது திராவிடமாக மருவியிருக்கலாம்.

தமிழ்க் கல்வெட்டுச் சான்றுகளும் செப்பேடுகளும் தமிழ்நாடு திராவிட நாடு என்று அழைக்கப்பட்டதை உறுதிசெய்கின்றன. சோழ மன்னர் விக்கிரம சோழனின் 11-ஆவது ஆட்சிக் காலத்தில் பொறிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டு ஒன்றில் திராவிட தேசம் என்ற சொல் இடம்பெறுள்ளது.“திரிபுவன சக்கிரவர்த்திகள் கோனேரி மேலக் கொண்டான் திராவிட தேசம், கிழக்கு நாட்டு ஸ்ரீகெருவூரான வீர சோழச் சதிர்வேதி மங்கல(த்து)முடைய நாயனாருக்கு” (சாசனம்– 714, பக் 670, சௌத் இண்டியன் டெம்பிள் இன்ஸ்கிரிப்ஷன் - வால்யூம் 2). தேசம் என்பது பெரிய அலகு. அதில் உள்ள சிறிய அலகு நாடு என்றாகிறது.

இந்தக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கெரூர் தற்போதைய தமிழகத்தின் கரூர் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமமாகும். கடந்த காலத்தில் திராவிட தேசத்தில் கொங்கு பகுதியும் உள்ளடக்கியுள்ளது என்பதைச் சொல்வதாக பொறிக்கப்பட்டுள்ளது.

அதுபோலவே அந்த காலத்தில் பல்வேறு செப்பேடுகளில் திராவிடம் குறித்து எழுதப்பட்டுள்ளது. அவற்றில் சிலவற்றைக் காணலாம்.

‘யிப்படி அநேகஞ் சதுர்யுகம் பூசை கொண்டருளிய தேவர் தேவன் தெய்வ சிகாமணி தேதேவோர்த்தமஞ் தேவதாசாரப்பூமன் பத்தர் பிரியன் பக்தவத்சல பார்பதி வல்லவன் பார்பதி மநோகரன் பார்பதினாயகன் முத்திக்குவித்து முக்கணிசுபர னின்றகோல மழகிய நிமலன் நேரமொரு பஞ்சவர்ன்னப் பிரகாசன் திருமுகவோவன் தெண்டாயுத அஷ்த்தன் சம்புத்தீவில் திராவிட தேசத்தில் தொண்ட மண்டலத்தில் காஞ்சிமானகரில் திருக்கம்பை யாத்திலே பார்பதா தேவி அற்தபாகம் பெற வேண்டி தபசு பண்ணுகையில்.. ’ (பக் – 152, அல்லாள இளையோன் செப்பேடு, கொங்கு சமுதாய ஆவணங்கள் புலவர் செ. இராசு).

இந்தச் செப்பேட்டிலும் திராவிட தேசத்தின் ஒரு பகுதியாக தொண்டை மண்டலமும் உள்ளதாக புலவர் செ. இராசு தனது நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இந்தச் செப்பேடும் 1584-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இதற்கு வலுசேர்க்கும் விதமாக மற்றொரு செப்பேடான மொரூர்காங்கேயர் ஏடு எனப்படும் செப்பேட்டில் பின்வருமாறு குறிப்புகள் உள்ளன.

‘செம்புத்தீவில் திராவிட தேசத்தில் தொண்டை மண்டலத்தில் காஞ்சி மாநகரில் திருக்கம்பையாற்றில் பார்வதி தேவியம்மான அர்த்த பாகம் பெற வேண்டிய அரியதபசி

பண்ணுகையில்..' (பக் 222, கொங்கு சமுதாய ஆவணங்கள். இந்த ஆவணம் தமிழ் துந்துபி ஆண்டில் எழுதப்பட்டது). இந்த ஆவணத்திலும் தொண்டை மண்டலம் திராவிட தேசத்தின் ஒரு பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல, கருமாபுரம் செப்பேட்டில், 'திராவிட தேசத்திச் சௌந்திர பாண்டியன் தனது மண்டலத்தில் நாடாளுவாரென்றும், னாடாழ்வாரென்றும், சோழ மண்டலத்திழ்க் கவண்டப்பட்டந்தனைப் பேர் பெற்றவரான, சான்றோர் குலத்தில், மதுராபுரியில் பாண்டியனிடத்தில் வாளது பற்றி மதுரை மண்டலீகர் சோழ மண்டலமும், திராவிட தேசமும் கம்பை மாநதியும் காஞ்சிபுரமும் கல்யாநிபுரியும் காணிப்பெற்றவரான..' (பக் 231, மேலது). ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர், ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சங்கராச்சாரியார் போன்றவர்களைப் பற்றிய குறிப்புகள் எல்லாம் காணப்படுவதால் இந்த செப்பேடு பிற்காலத்தில் தான் எழுதப்பட்டிருக்க வேண்டும். மேற்கண்ட சான்றுகள் அனைத்தும் தமிழ்நாடு திராவிட தேசத்தின் ஒரு பகுதியாகக் குறிப்பிடப்பட்டதை உறுதிப்படுத்துபவை.

சம்ஸ்கிருத வேதசாத்திர பேரறிஞர் 'காவ்ய கண்ட' கணபதி முனிவரின் (1878 - 1936) வாழ்க்கை வரலாற்றை கபாலி சாஸ்திரி எழுதினார். 'வாசிஷ்ட வைபவம்' என்ற தலைப்பிலான அத்தியாயத்தில் திராவிட தேசத்தில் 'சேர்மாதேவி' என்ற இடத்தில் கிர்த்திமானாவை. வே.சுப்பிரமணி அவர்களால் பாரத்வாஜாச்ரமம் ஒன்று நிறுவப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது ('சேரன்மாதேவி குருகுலப் போராட்டம்' - பழ. அதியமான்).

திராவிடம் என்ற சொல்லை தாயுமானவரும் கையாண்டுள்ளார். ஒன்பதாம் நூற்றாண்டில் 'சேந்தன் திவாரகம்' திராவிடம் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளது என்று பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியம் தன்னுடைய ஆய்வில் குறிப்பிடுகின்றார். பிஷப் கார்டுவெல் 1856-இல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலில் திராவிடம் என்ற பதத்தை நிலைநாட்டிய அதே காலகட்டத்தில் அயோத்தி தாசர், 'திராவிட ஜன சபை' என்ற அமைப்பைத் தொடங்கினார். 1899-இல் பதிப்பிக்கப்பெற்ற சபாபதி நாவலரின் தமிழ் இலக்கண நூலுக்கு 'திராவிடப் பிரகாசிகை' என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

பிஷப் கார்டுவெல்லுக்கு முன்பே மனோன்மணியம் சுந்தரனார், 'திராவிட நல் திருநாடு' என்று குறிப்பிட்டிருக்கிறார். பெரியாருக்கு முன்பே எஸ்.ஜி. ராமானுஜலு நாயுடு 1907-இல் 'திராவிடாபிமானி' என்ற வார இதழை தொடங்கி நடத்தியிருக்கிறார். 'திராவிட உத்கல வங்கா' என்று பாடுகிறது இரவீந்திரநாத் தாகூரின் தேசிய கீதம்.

பெரியார், திராவிடக் கழகத்தை தொடங்கும்போதும், பேரறிஞர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடங்கிய போதும் முன்னிறுத்திய திராவிடம் என்ற சொல்லின் பழைமையை இந்த தரவுகள் நமக்கு சுட்டிக் காட்டுகின்றன. தமிழர் வரலாற்றில் மட்டுமல்ல, இந்திய வரலாற்றிலும் தொன்று தொட்டு இந்த வார்த்தை புழக்கத்தில் உள்ளது.

திராவிடம் என்பது 19-ஆம் நூற்றாண்டில் திடுதிப்பென்று புழக்கத்திக்கு வந்த சொல் அல்ல. வரலாற்றுரீதியாக பண்டைய காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்ட சொல். தீபகற்ப இந்தியாவுக்குப் பொதுப் பெயர் அது. திராவிடத் தேசியமும் தமிழ் தேசியமும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல. தமிழ்த் தேசியத்தையும் உள்ளடக்கியதே திராவிட தேசியம்.

**தினமணி,** 12.08.2021